செ.வெ.எண்:36/2019

நாள்:16.08.2019

## பத்திரிக்கைச் செய்தி

முன்னாள் படைவீரர்கள் தங்களது சிறார்களுக்கு தொழில் கல்விக்கான 2019 - 2020-ம் ஆண்டு பிரதம மந்திரியின் கல்வி உதவித் தொகைப் பெற ONLINE மூலமாக 10.11.2019-க்குள் விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது. 60% மதிப்பெண் மற்றும் அதற்கு மேல் உள்ளவர்கள் மற்றும் 2019-2020 கல்வி ஆண்டில் தொழில் கல்வியில் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே இந்த கல்வி உதவித் தொகை பொருந்தும். மேலும் இரண்டு குழந்தைகளுக்கு மட்டுமே இந்த கல்வி உதவித் தொகை வழங்கப்படும். மேலும் 2019-2020 கல்வி ஆண்டு முதல் இவ்வுதவித் தொகை முன்னாள் படைவீரர்களின் மகளது படிப்பிற்கு ஆண்டிற்கு 36000/- மற்றும் மகனது படிப்பிற்கு ஆண்டிற்கு 30000/- எனவும் உயர்த்தப்பட்டுள்ளது. இக்கல்வி உதவித் தொகை குறித்த முழு விவரம் Website.www.ksb.gov.in என்ற இணையதள முகவரியில் தெரிந்து கொள்ளலாம்.

சிவகங்கை மாவட்டத்திலுள்ள முன்னாள் படைவீரர்களின் சிறார்கள் இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்தி பயனடையுமாறும், மேலும் இது தொடர்பான விபரங்கள் அறிய சிவகங்கை மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தினை அணுகி பயனடையுமாறும் சிவகங்கை மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் திரு.இரா.வரதராஜன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**::வெளியீடு::**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**சிவகங்கை.**

Scanned by CamScanner